**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் - வெள்ளிக்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி 19-ம் நாள்

**கு.ப.ம.எண்.557/2026**

1. வெங்கடேசன், வயது 52/2026, த/பெ கோபாலகிருஷ்ணன்
2. பாலமுருகன், வயது 47/2026, த/பெ பாலகிருஷ்ணன்
3. தேவதாஸ், வயது 48/2026, த/பெ அம்மாசி
4. குணசீலன், வயது 30/2026, த/பெ சேகர் ..... மனுதாரர்கள்/1 முதல் 4 எதிரிகள்

-எதிர்-

காவல் ஆய்வாளர், வேளாங்கண்ணி காவல்நிலையம்,
குற்ற எண் 199/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (03.07.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் திரு. கே. காளிதாசன் மற்றும் எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரை ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 199/2026-ல் பிரிவு 303(2) BNS மற்றும் 21(1) Mines and Minerals (D & R) Actன் கீழான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவரால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் நிரபராதிகள் என்றும், மனுதாரர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் கடந்த 29.06.2026 அன்று கைது செய்யப்பட்டு 05 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார்கள் என்றும், புலன் விசாரணைக்கும், பின்னிட்டு வழக்கு விசாரணைக்கு ஆஜராகுவதாக உறுதியளித்தும், தகுந்த ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்துவதற்கும் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு கட்டுபடுவதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துக்கொள்வதாகவும், ஆகவே மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரையில் கடந்த 28.06.2026ம் தேதி புகார்தாரரான வேளாங்கண்ணி காவல் ஆய்வாளர் பார்ட்டி சகிதம் ரோந்து பணியில் இருந்தபோது பாலக்குறிச்சி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள வரதராஜபெருமாள் கோவிலுக்கு சொந்தமான சுப்பிரமணியன் என்பவரது அனுபவத்தில் உள்ள வயலில் இருந்து சட்டவிரோதமாக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் களிமண்ணை கடத்தி செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பார்வையிட்டதில், மனுதாரர்கள்/1 முதல் 4 எதிரிகள் மற்றும் 5வது எதிரி ஆகியோர்கள் சேர்ந்து 3 டிராக்டர்கள் (பதிவெண்கள் முறையே TN51 AU 2650. TN50 AL 2541, TN51 AH 5083) மற்றும் ஒரு ஜேசிபி மூலம் சுமார் **1** யூனிட் வீதம் 3 டிராக்டர்களிலும் களிமண்ணை சட்டவிரோதமாக திருடியதாகவும், சட்ட விரோதமாக கனிமங்களை தோண்டுதல், சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல் போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்றும், வழக்கு புலன்விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், எனவே எதிரிகளை பிணையில்விட்டால், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபட வாய்ப்புள்ளது என்று கூறி எதிரிகளை பிணையில்விட கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் ஒருவர் மீது பிரிவு 303(2) BNS மற்றும் 21(1) Mines and Minerals (D & R) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 28.06.2026ம் தேதி பாலக்குறிச்சி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள வரதராஜபெருமாள் கோவிலுக்கு சொந்தமான சுப்பிரமணியன் என்பவரது அனுபவத்தில் உள்ள வயலில் இருந்து சட்டவிரோதமாக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மனுதாரர்கள்/1 முதல் 4 எதிரிகள் மற்றும் 5வது எதிரி ஆகியோர்கள் சேர்ந்து 3 டிராக்டர்கள் (பதிவெண்கள் முறையே TN51 AU 2650. TN50 AL 2541, TN51 AH 5083) மற்றும் ஒரு ஜேசிபி மூலம் சுமார் **1** யூனிட் வீதம் 3 டிராக்டர்களிலும் களிமண்ணை சட்டவிரோதமாக திருடியதாகவும், சட்ட விரோதமாக கனிமங்களை தோண்டுதல், சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல் போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். எதிரிகள் மீது எந்த குற்ற முன்வழக்கு நிலுவையில் இல்லை. மனுதாரர்கள் கடந்த 28.06.2026 அன்று கைது செய்யப்பட்டு கடந்த 05 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார். பாலக்குறிச்சி அருள்மிகு ஸ்ரீ வரதராஜபெருமாள் கோவில் செயல் அலுவலர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு இன்று நேரில் ஆஜராகி "எங்களது கோவில் இடத்திற்கு எவ்வித குந்தகமும், இழப்பும் ஏற்படவில்லை" என எழுத்துப்பூர்வமாக தெரிவித்தார். ஆகவே, குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் சூழ்நிலையை கவனத்தில் எடுத்துக்கொண்டும், மனுதாரர்களுக்கு நிபந்தனையின் பேரில் ஜாமீன் வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவில், இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களை ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், **இந்நீதிமன்றத்தின்** திருப்திக்குட்பட்டு தாக்கல் செய்ய வேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப் பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. மனுதாரர்கள் சிறையிலிருந்து விடுதலையான தேதியிலிருந்து மறு உத்தரவு பிறப்பிக்கும்வரை தினமும் இருவேளைகளாக காலை 10.00 மணிக்கும் மாலை 05.00 மணிக்கும் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும்
2. விசாரணை நீதிமன்றத்தில் அல்லது காவல்துறை முன், அவர்கள் அழைக்கும் போதெல்லாம் நேரில் ஆஜராக வேண்டும்.
3. வழக்கில் தொடர்புடைய சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.
4. மனுதாரர்கள் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது.
5. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

இன்று (03.07.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G M VASANTHI
Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.03 17:40:25 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்
1. மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்.
2. திரு. கே. காளிதாசன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.